4th November 1965]

Service under Municipalities

* 284 Q.—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state the present stage of the proposal of the provincialisation of the Municipal services?

கனம் திரு. கோ. பூவராகன் : நகராட்சிகளிலுள்ள கமிஷனர், எஞ்சினியர், சுகாதார அதிகாரி ஆகிய உத்தியோகங்கள் ஏற்கனவே சர்க்கார் உத்தியோகங்களாக்கப்பட்டுள்ளன. இன்னும் சில உத்தியோகங்களைச் சர்க்கார் உத்தியோகங்களாக்கும் உத்தேசம் பரிசீலனையில் உள்ளது. இதற்காக மதருஸ் 1920-ம் வருடத்திய நகராட்சி சட்டத்தில் அவசியமான திருத்தங்கள் பற்றியும் கவனிக்கப்படுகிறது.

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஸார், சில பதவிகளை அரசாங்க சர்விசாக எடுப்பதற்குப் பதிலாக, முனிசிபாலிடியில் உள்ள எல்லாச் சிப்பந்திகளையும், எல்லா முனிசிபாலிடி சிப்பந்திகளையும் ஒரே சர்விஸ் என்று கொண்டுவந்து, சிப்பந்திகளை ஒரு முனிசிபாலிடியிலிருந்து இன்னொரு முனிசிபாலிடிக்கு மாற்றி அவர்களுக்குப் பிரமோஷனுக்கு உதவி செய்யும் வகையில் ஏற்பாடு செய்ய உத்தேசம் உண்டா?

கனம் திரு. கோ. பூவராகன் : பரிசீலனை செய்யும்போது, இவையெல்லாம் கவனிக்கப்படும்.

திரு. வை. சங்கரன் : ஸார், தற்போதுள்ள, முனிசிபாலிடி ஊழியர்களில் ஆபீசர்கள் போன்றவர்களுக்குப் பல சலுகைகளும், மேற்கொண்டு ப்ராஸ்பெக்ட்ஸுக்காக இம் முறையில் அரசாங்க ஊழியர்கள் நிலைக்கு வழி செய்யும்போது, கீழ்நிலை ஊழியர்களுக்கும், அலுவலர்களுக்கும் இதேபோல அவர்கள் நிலையில் முன்னேற்றம் காண ஏற்பாடு செய்ய உத்தேசம் உண்டா?

கனம் திரு. கோ. பூவராகன் : சட்டத்தைத் திருத்தி அமைக்கும் போது, இந்த யோசனைகளெல்லாம் கவனிக்கப்படும்.

திரு. இராம. அரங்கண்ணல் : ஸார், இந்த அலுவலர்களையெல்லாம் அரசாங்கமே நியமிப்பது என்கிற உத்தரவு எப்பொழுது அமுலுக்கு வரும் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. கோ. பூவராகன் : சட்டம் நிறைவேற்றிய பிறகு வரும்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஸார், இந்தச் சட்டத்தை எந்த வகையில் திருத்தி அமைக்கப் போகிறீர்கள் என்பதைக்கூட அமைச்சர் குறிப்பிடவில்லை. அது போக, இது முனிசிபாலிடி சிப்பந்திகள் பற்றியது. அவர்களைத் தேர்ந்தெடுக்கவும், ஊதியம் நிர்ணயம் செய்யவும், வசதிகள் கொடுக்கவும், ஒழுங்குப் பிரச்சினைகளைப் பார்க்கவும், இதற்கென்று ஒரு சர்விஸ் கமிஷன் அமைக்க சர்க்காருக்கு உத்தேசம் உண்டா?

கனம் திரு. கோ. பூவராகன் : இந்த விஷயமும் சர்க்கார் கவனத்தில் இருக்கிறது.